# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 125 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 02.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ஆந்திராவில் ரூ.18,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்



பிரதமர் மோடி ஒரு நாள் சுற்றுப்பயணமாக ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு சென்று, பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், நிறைவு பெற்ற திட்டங்களை தொடங்கியும் வைக்கிறார். ஆந்திர மாநிலத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அந்த மாநிலத்தில் இன்று சுமார் ரூ.18,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். அதன்படி விஜயநகரம் மாவட்டத்தில் உள்ள போகபுரத்தில், ரூ.5,700 கோடி மதிப்பிலான அல்லூரி சீதாராம ராஜு சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். தென் கொரியாவைச் சேர்ந்த APACT நிறுவனத்துடன் இணைந்து ASIP டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (ASIP Technologies Pvt Ltd) நிறுவனம் சார்பில், விசாகப்பட்டினத்தில் அமையவுள்ள ரூ.460 கோடி மதிப்பிலான ASIP செமிகண்டக்டர் திட்டத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இது இந்திய செமிகண்டக்டர் இயக்கத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆந்திர பிரதேசத்தின் முதல் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை ஆகும். ஆண்டுக்குச் சுமார் 9.6 கோடி செமிகண்டக்டர் சிப்களை உற்பத்தி செய்வதுடன், செமிகண்டக்டர் உற்பத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒரு வலுவான துணை சூழலமைப்பையும் இந்த ஆலை உருவாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சுமார் ரூ.5,550 கோடி முதலீட்டில் 'ஸ்பெஷல் பர்பஸ் வெஹிக்கிள்' (SPV) மூலம் 'பவர்கிரிட்' (POWERGRID) நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் கர்னூல்-IV புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலம்(REZ) - முதல் கட்ட (4.5 GW) திட்டத்திற்கான மின்கடத்தி அமைப்பிற்கும் பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார்.

மேலும், சுமார் ரூ.3,550 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட கர்னூல் காற்றாலைமற்றும்சூரிய ஆற்றல் மண்டலங்களுக்கான மின் கடத்தி அமைப்பு திட்டங்களையும், பவர்கிரிட்( POWERGRID) நிறுவனத்தால் ரூ.820 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட அனந்தபுரம்(2,500 மெகாவாட்) மற்றும் கர்னூல் (1,000 மெகாவாட்) சூரிய ஆற்றல் மண்டலங்களுக்கான மின் கடத்தி அமைப்புதிட்டங்களையும்அவர்தொடங்கி வைத்தார்.

ரூ.1,880 கோடி மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, அவற்றை பிரதமர் மோடி நாட்டிற்கு அர்ப்பணித்தார். அதோடு, தேசிய நெடுஞ்சாலை-565 பெஞ்சலகோனா-ஏர்பேடு பிரிவில் உள்ள லிங்கசமுத்திரத்தில், உயர்மட்டப் பாலத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

இந்த திட்டங்கள் விஜயவாடா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சாலை பாதுகாப்பை மேம்படுத்தவும், விசாகப்பட்டினம் மற்றும் ஐதராபாத் இடையிலான பயண தூரம் மற்றும் நேரத்தைக் குறைக்கவும், அத்துடன் பிராந்திய அளவிலான போக்குவரத்து இணைப்பை ஊக்குவிக்கவும் உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# “மேகேதாட்டு விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட முடியுமா முடியாதா?” தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி



சென்னை: "மேகேதாட்டு விவகாரத்தில் தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்வர் விஜய். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில், "தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்வர் விஜய். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத்தினர் எல்லோரும் மேகேதாட்டு விவகாரத்தில்கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனளிக்காது என்று எச்சரித்தோம். கர்நாடகம் செல்ல வேண்டாம் என்று தமிழக முதல்வருக்கு கோரிக்கை வைத்தோம். தமிழகத்துக்கு தண்ணீர் தரமுடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்ட மாநிலத்துடன் சட்டரீதியாகத்தான் போராட வேண்டும் என்பதே கடந்தகாலத்தில் நாம் பெற்ற படிப்பினை. உபரிநீரை வெளியேற்றும் வடிகால் பகுதியாகத்தான் அவர்கள் தமிழகத்தைப் பார்க்கிறார்கள்.

ஆனால்,தான் கர்நாடகம் சென்றால் காவிரியைக் கையோடு எடுத்துவந்துவிடலாம் என்று தமிழகத்தின் புதிய முதல்வர் நினைத்தாரோ என்னவோ... நமது எச்சரிக்கைகளை மீறி கர்நாடகம் செல்வதற்குத் தூது அனுப்பினார். தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடச் சொல்லி CWMA உத்தரவிட்டதும் "நீங்கள் இப்போதைக்கு வரவேண்டாம்" என்று கேட்டைச் சாத்திவிட்டார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைகளை முன்பே கணித்துதான், தமிழகத்தில் உள்ள அனைவரும் எச்சரித்தோம். இனியேனும் தமிழகத்தின் உயிர்ப்பிரச்சினையான காவிரிவிவகாரத்தை முதல்வர் ஆலோசனைகளோடு அணுக வேண்டும்.

நமது முதல்வரை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, கர்நாடகத்தில் ஆகஸ்ட் 2 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அம்மாநில முதல்வர் அழைப்பு விடுத்து அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதைத் தனது செயலால் உணர்த்திவிட்டார். முதல்வர் விஜய் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?

# கேரள கனமழைக்கு 6 பேர் உயிரிழப்பு; 9 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்




திருவனந்தபுரம்: கேரளாவில் கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், வயநாடு, மலப்புரம் உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கேரளாவில் கனமழையால் நிலச்சரிவு உள்ளிட்ட காரணங்களால் உயிரிழந்தோர்எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. முதல் கேரளாவின் பல மாவட்டங்களில் இன்று (சனிக்கிழமை) அதிகாலைமுதல்கனமழை தொடர்ந்து பெய்து வருவதால் நிலச்சரிவுகள், வெள்ளப்பெருக்கு மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், கேரளாவின் 9 மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் மிக அதிகனமழைக்கான 'ரெட் அலர்ட்' எச்சரிக்கை விடுத்துள்ளது.

மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு, பத்தனம்திட்டா, கோட்டயம், இடுக்கி மற்றும் திருச்சூர்ஆகிய 9 மாவட்டங்களில் மிக அதிகனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இடுக்கி மாவட்டம் தொடுபுழா அருகிலுள்ள குடயத்தூர் அதுர்மலையில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு வீடு மண்ணில் புதையுண்டதில் சுமதி என்பவர் உயிரிழந்தார். வயநாட்டில்மின்சாரம் தாக்கி ஒருவரும், மலப்புரத்தில் ஓடையில்சிக்கிநான்குவயது சிறுவனும் உயிரிழந்தனர். இதனால் கேரளாவில் கனமழையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. கேரள கனமழை, நிலச்சரிவு மற்றும் மண் சரிவு நிலவரம் குறித்து முதல்வர் வி.டி.சதீசன், வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களைத் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினார். கனமழை தீவிரமடைந்துள்ள நிலையில், எந்தவொரு அவசர சூழலையும் எதிர்கொள்ள தயாராக இருக்குமாறு இடுக்கி, பத்தனம்திட்டா, கோட்டயம் மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் சதீசன் அறிவுத்தினார்.

மேலும், கனமழையை எதிர்கொள்ள தேசிய பேரிடர் மீட்புப் படை, காவல் துறை மற்றும் அரசுத் துறைகள் தயாராக உள்ளன என்று அவர் தெரிவித்தார். கனமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கட்டுப்பாட்டு அறைகளை திறந்துள்ள கேரள அரசு, தொடர்பு எண்களையும் அறிவித்துள்ளது. கனமழையால், தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. நகர் முழுவதும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் கேரளாவில் நீர்த்தேக்கங்கள் நிரம்பி வருவதால் அதிகாரிகள் வெள்ள எச்சரிக்கைகளை விடுத்து ள்ளனர்.தொடுபுழா அருகிலுள்ள மூவாற்றுப்புழா ஆறு,புனலூரில் உள்ள கல்லடா ஆறு, பாலாவில் உள்ள மீனாச்சில் ஆறு மற்றும் மணிமலை ஆறு, பம்பை ஆறு ஆகியவற்றில் நீர்மட்டம் அபாயகரமாக உயர்ந்து வருவதால், நீர்வளத் துறை இந்த பகுதிகளுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



# லட்சிய ஜனநாயக கட்சியின் மண்டல செயலாளராக அரவிந்தசாமி நியமனம்!

லட்சிய ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில், கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களிடம் இருந்து அரவிந்தசாமி மண்டல செயலாளருக்கான பணி நியமனச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா மற்றும் மாநில துணைப் பொதுச் செயலாளர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

சான்றிதழைப் பெற்றுக் கொண்ட மண்டல செயலாளர் அரவிந்தசாமி கூறுகையில், கட்சியின் வளர்ச்சிக்கும் பொதுமக்களின் நலனுக்கும் தலைவரின் வழிகாட்டுதலின்படி தீவிரமாகப் பணியாற்றுவேன் என உறுதி அளித்தார். இதில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# விருத்தாச்சலம் பெரியகோவிலில் 12 மாதங்களாக தொடரும் அன்னதான சேவை

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு, சமூக ஆர்வலரும், பா.ஜ.க., மாவட்ட ஓ.பி.சி. அணி பொதுச் செயலாளருமான எ. கொளப்பாக்கம் இளையராஜா, தாம் நடத்தி வரும் ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ் மற்றும் நெல் அறுவடை இயந்திர சேவை நிறுவனங்கள் சார்பில் கடந்த 12 மாதங்களாக ஒவ்வொரு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் தொடர்ந்து அன்னதானம் வழங்கி வருகிறார்.



அதன் தொடர்ச்சியாக, நேற்று, ஆகஸ்ட் 01 சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இச்சேவையை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டி, தொடர்ந்து இதுபோன்ற அறப்பணிகளில் ஈடுபட வேண்டும் என வாழ்த்து தெரிவித்தனர்.

## பொற்பனங்கரனை ஊராட்சியில்

# ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் மற்றும் ஆதிபராசக்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொதுமருத்துவ முகாம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் பொற்பனங்கரனை ஊராட்சியில் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க தலைவர் கோ.பா. அன்பழகன் மற்றும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சம்பத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இந்த சிறப்பு வாய்ந்த முகாமில் 500க்கும் மேற்பட்டோர் கண் தொண்டை காது மற்றும் பொது மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை பெற்று சென்றனர் முன்னதாக ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒருங்கிணைப்பாளர் செல்வம் அவர்களின் ஒருங்கிணைப்பில் மருத்துவர்கள் குழுவினர் நிவேதா. சினேகா லதா. பிரவின். சித்தார்த். மற்றும் மருத்துவ பயிற்சியாளர்கள் செவிலியர்கள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பொன்னன். வார்டு உறுப்பினர்கள் கலா ரவி கமலக்கண்ணன் தேவி ரவி ஊராட்சி செயலாளர் சகிலா பானு துப்புரவு பணியாளர்கள் ஜெசிந்தா காளியம்மாள் முனியம்மாள் கோட்டம்மாள். பணிதல பொறுப்பாளர் ஜெயா. மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்



# தூத்துக்குடி 1ஆம் கேட் பகுதியில் ரெயில்வே மேம்பாலம் கட்ட ஆய்வு நடைபெற்று வருவதாக மாநகராட்சிக் கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்



தூத்துக்குடி மாநகராட்சிக் கூட்டம் மேயர் என்.பி. ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தைத்தொடங்கி வைத்து மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: தூத்துக்குடி மாநகராட்சியில் தொடர்ந்து பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தபடி, மாநகராட்சியின் 60 வார்டுகளிலும் விரைவில் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

வரவிருக்கும் மழைக்காலத்தை எதிர்கொள்ளும் வகையில் பக்கிள் ஓடையை அகலப்படுத்தும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. மேலும் நகரில் உள்ள சிறிய மற்றும் பெரிய கழிவுநீர் கால்வாய்கள் அனைத்தும் முழுமையாகத் தூர்வாரப்பட உள்ளன.

பொதுமக்கள் குடிநீரை வீணாக்கக் கூடாது. குடிநீரைச் செடிகளுக்குப் பாய்ச்சுவதற்கும், கட்டிடப் பணிகளுக்கும் பயன்படுத்துவது தவறான செயலாகும். இதனை மீறுபவர்கள் மீது மாநகராட்சி நிர்வாகம் சார்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தூத்துக்குடி மாநகரப் பகுதிகளில் வருகிற ஆகஸ்ட் 15ஆம் தேதி முதல் தினசரி குடிநீர் மற்றும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தகவல் மழைக்கு முன்பாக 14 வழித்தடங்கள் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென வேண்டுகோள்

தூத்துக்குடி மாநகர பகுதிகளில் 36 மேல்நிலை நீர் தேக்க குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டு அவைகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன இதில் பல்வேறு பகுதியில் தினசரி குடிநீர் மற்றும் இரண்டு நாட்களுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை என குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது இந்த நிலையில் வருகிற ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி சுதந்திர தினம் முதல் அனைத்து பகுதிகளுக்கும் தினசரி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேலும் 24 மணி நேரமும் குடிநீர் கிடைப்பதற்கும் மாநகராட்சி நிர்வாக சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார் எனவே பொதுமக்கள் குடிநீரை குடிநீருக்கு மற்றும் பயன்படுத்த வேண்டும் அவ்வாறு இல்லாமல் மற்ற தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது அவ்வாறு பயன்படுத்தினால் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்

மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கழிவு நீர் ஓடைகளும் மண் அகற்றப்பட்டு மழை நீர் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேலும் தூத்துக்குடி மாநகரிலிருந்து 16 வழிதடங்கள் மூலம் மழை வெள்ள நீர் வெளியே செல்கிறது இந்த 14 வழித்தடங்களும் முறையாக தூர்வாரப்பட்டு மழைநீர் தேங்கா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

# தூத்துக்குடி பனிமய மாதா பேராலயத் திருவிழாவை முன்னிட்டு, மாநகராட்சிக்கு சொந்தமான ரோச் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள "அன்னை பொருட்காட்சி" திறப்பு விழா

தூத்துக்குடியில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற பனிமய மாதா பேராலயத்தின் 444-வது ஆண்டுத் திருவிழா கடந்த ஜூலை 26-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, ஆகஸ்ட் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு ரோச் பூங்காவில் அன்னை பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சியை தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொண்டு நாடா வெட்டி அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். பொருட்காட்சி அலுவலகத்தைப் பனிமய அன்னை பேராலய அதிபரும் பங்குத்தந்தையுமான ஜான் செல்வம் திறந்து வைத்தார்.



இந்த விழாவில் மாமன்ற உறுப்பினர் ஜெ. ரிக்டா ஆர்தர் மச்சாது, பாண்டியாபதி தலைவர் இன்னாசி, செயலாளர் அந்தோணிசாமி, அன்னை பொருட்காட்சியின் தலைவர் ஆர்தர் மச்சாது, செயலாளர் பெப்பின் மிசியர் மற்றும் முக்கியப் பிரமுகர்களான ஹெர்மன், பெப்பீரீஸ், ராபர்ட், குயிக்கட், நியூமன், ஜெனிபர், சுகிலன் உட்பட ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இப்பொருட்காட்சி வருகிற ஆகஸ்ட் 15-ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. பொதுமக்களுக்கு நுழைவுக் கட்டணம் எதுவுமின்றி இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கீழ வீராணம் ஊராட்சியில் உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ வீராணம் ஊராட்சியில், உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை முன்னிட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அ. வீரபாண்டியன் தலைமை தாங்கினார்.

வீரகேரளம்புதூர் வட்டாட்சியர் ஆனந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் ஞானபிரகாசி, ஊராட்சி செயலர் பாண்டியராஜ், வீ.கே.புதூர் உதவி காவல் ஆய்வாளர் சேகனா, சுகாதார ஆய்வாளர் ஷியாம் டேனியல், குறுவட்ட வருவாய் ஆய்வாளர் முத்துகுமார், கிராம நிர்வாக அலுவலர் சுதர்சன பாண்டியன், கிராம உதவியாளர் முருகராஜ், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, புஷ்பா, அனிபா, அங்கன்வாடி பணியாளர்கள் பூங்கோதை, மல்லிகா, தாஜ் நிசா, ஆனந்தி, நீர்பானக் குழுத் தலைவர் முத்து பாண்டியன், நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



# அப்துல்கலாம் நினைவு தினம்: விவேகானந்தா கல்லூரியில் மரக்கன்றுகள் நட்டுவைத்து அஞ்சலி

தென்காசி மாவட்டம் சேர்ந்த மரம் அருகே வெள்ளாளங்குளம் விவேகானந்தா கல்லூரியிலமுன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, சுவாமி விவேகானந்தா கல்வி அறக்கட்டளை மற்றும் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) அலகு எண் 256 சார்பில் அருள்மிகு நாகமலை ஸ்ரீ பாலசுப்ரமணியர் திருக்கோயில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியை கல்வி நிறுவனங்களின் நிறுவனர் முனைவர் பி. கல்யாணிசுந்தரம் தலைமையேற்று தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக ஊர் நாட்டாமை சண்முகவேல் முருகையா, ஊர்த் தலைவர் ஜெய கண்ணன், துணை ஊர்த் தலைவர் விஜயன், கல்லூரித்தலைவர் தினேஷ், நிர்வாக இயக்குநர் ஜெனிடா மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் சுவாமிதாஸ் முன்னிலை ஆகியோர் வகித்தனர் விழாவில் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் நினைவாக மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தங்களது உறுதியை வெளிப் படுத்தினர்.



நிகழ்வில் உரையாற்றிய முனைவர் பி. கல்யாணிசுந்தரம் "மரங்கள் மனித வாழ்வின் அடிப்படை ஆதாரங்களாக விளங்குகின்றன. சுற்றுழலை பாதுகாக்க ஒவ்வொருவரும் தொடர்ந்து மரக்கன்றுகளை நட்டு அவற்றை பராமரிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மேலும், டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் புகழ்பெற்ற கருத்தான, "கனவு காணுங்கள்; அந்தக் கனவை நனவாக்க கடினமாக உழையுங்கள்" என்ற வாசகத்தை மாணவர்களிடம் எடுத்துரைத்து, உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டுமென அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சி கிராம மக்களிடமும் மாணவர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. மரக்கன்றுகள் நடும் பணியில் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து செயல்பட உறுதியளித்தனர். அப்துல் கலாம் அவர்களின் நினைவு நாளை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடிய இந்த நிகழ்வு, மாணவர்களிடையே சமூகப் பொறுப்புணர்வையும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் மேலும் வலுப்படுத்தியதாக அமைந்தது.

# தூத்துக்குடி மாநகராட்சி கூட்டத்தில் அ.தி.மு.க.வை சேர்ந்தவர் கவுன்சிலர் மந்திரமூர்த்தி தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்தார்

## நகராட்சி நிர்வாகம் இருக்கை அமைக்கவில்லை பேசுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டதால் தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து வெளிநடப்பு



தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டம் இன்று மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது மேயர் உரைக்குப் பின்பு கூட்டம் துவங்கியவுடன் தமிழக வெற்றி கழகத்திற்கு மாறியுள்ள முன்னாள் அதிமுக கவுன்சிலர் மந்திரமூர்த்தி தனக்கு இருக்கைஒதுக்கவேண்டுமென மனு அளித்தார் உடனடியாக மேயர் நீங்கள் தமிழக வெற்றி கழக கவுன்சிலர் கிடையாது அதிமுக கவுன்சிலர் என்று தான் தூத்துக்குடி மாநகராட்சி ஆவணத்தில் உள்ளது நீங்கள் முதலில் அதை நிறுபியுங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக பத்திரிகைகளுக்கு வெளியே சென்று பேட்டி கொடுப்பதை தான் வாடிக்கையாக வைத்துள்ளீர்கள் வெளிநடப்பு செய்ய வேண்டும் என்றால் உடனடியாக செய்யுங்கள் என தெரிவித்தார்

இதைத் தொடர்ந்து தமிழக வெற்றி கழகத்தில் இணைந்துள்ள முன்னாள் அதிமுக கவுன்சிலர் மந்திரமூர்த்தி கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தார்.

பின்னர் இது குறித்து கவுன்சிலர் மந்திரமூர்த்திதெரிவிக்கையில்: தமிழக வெற்றிக்கழக சார்பில் மாமன்ற கூட்டத்தில் பங்கெடுத்து மக்களின் பிரச்சனையை பேச வேண்டும் என்று கலந்து கொண்டேன் ஆனால் கடந்த முறை மாமன்ற கூட்டத்தில் நான் உட்காருவதற்கு இருக்கை அமைக்கவில்லைமீண்டும்இன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் எனக்கு இருக்கை இல்லை பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை கடந்த ஐந்து ஆண்டு வலியுறுத்தியுள்ளேன் தற்போது தமிழகத்தின் மக்கள் மிகப்பெரிய வெற்றியை தமிழக வெற்றி கழகத்தின் ஜோசப் விஜய் அவர்களுக்கு வாக்கு அளித்துள்ளனர் அந்த வெற்றியை கொண்டாடும் விதமாக நானும் தற்போது மக்களின் சேவைக்காக தமிழக வெற்றி கழகத்தில் இணைந்து தொடர்ந்து மக்களின் பணியை தமிழக வெற்றி கழகம் சார்பில் செய்து வருகிறோம். இது வேண்டுமென்று அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் தூத்துக்குடி மாநகராட்சி திமுக மேயர் மற்றும் ஆணையர் கடந்த முறை மாமன்ற கூட்டத்திலும் எனக்கு உட்காருவதற்கும் பேசுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது இன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்திலும் எனக்கு உட்காருவதற்கும் பேசுவதற்கும் அனுமதிக்கவில்லை தூத்துக்குடி மாநகராட்சி படுதோல்வி அடைந்துள்ளது இதனால் மக்களுக்கு சாக்கடை கலந்த குடிநீர் வருகிறது மேலும் கடந்த சில நாட்களுக்கு முன்பு தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் சோதனையில் கணக்கில் வராத பணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது இதுவரை ஊழல் செய்த மாநகராட்சி அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை ஆனால் மக்களின்பிரச்சினையை குறித்தும் தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகசீர்கேடு பற்றி பேசுவதற்கு தமிழக வெற்றி கழக மாமன்ற உறுப்பினர் ஆன எனக்கு அனுமதி மறுக்கப்படுகிறது இதனால் இருக்கை அமைக்காத மாநகராட்சி கண்டித்து வெளிநடப்பு செய்துள்ளேன் என்று தெரிவித்தார்.



மதுரை திருமங்கலம் வடகரை கிராமம், பாண்டியன் தெருவில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027 முன்னிட்டு நடைபெற்று வரும் வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027 நாட்டின் திட்டமிடல், மற்றும் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கான முக்கியமான தரவுகளை வழங்கும் என்பதால், பொதுமக்கள் கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான தகவல்களை சரியாக வழங்கி முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் (தன்னாட்சி) 15வது பட்டமளிப்பு விழா



அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று, தன்னாட்சி அந்தஸ்துடன் செயல்பட்டு வரும் நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் 15-வது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் அவர்கள் தலைமையேற்று நடத்தியதுடன் சிறப்பு விருந்தினராககலந்துகொண்ட சென்னையில் செயல்பட்டு வரும் மல்டிகோர் வேர் நிறுவனத்தின் முதன்மை மனிதவள அலுவலர் சசிகாந்த் ஜெயராமன் அவர்களை வரவேற்று, பட்டதாரிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேலும், 120-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் வருகை புரிந்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளன எனவும் பல மாணவர்கள் ஒரே நிறுவனத்தில் பல்வேறு வேலைவாய்ப்புகளை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர் எனவும் கூறி மாணவர்களை பாராட்டினார். இங்கு பட்டம் பெற வருகைப்புரிந்துள்ள மாணவர்களும், அவர்தம் பெற்றோர்களும் தங்களது வாழ்க்கையில் ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்று வாழ்த்தி தனது உரையினை நிறைவு செய்தார்.

பின்னர், நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் எஸ். நந்தகோபால் அவர்கள் நடப்புக் கல்வியாண்டில் அனைத்துதுறைகளிலும் அடைந்த முன்னேற்றங்களையும், அதற்கு உறுதுணையாக செயல்புரிந்த துறைத் தலைவர்கள். பேராசிரியர்கள், உதவி-பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்குகள் கொண்ட ஆண்டறிக்கையினை வாசித்தார்கள்.

இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் மல்டிகோர் வேர் நிறுவனத்தின்முதன்மை மனிதவள அலுவலர் திரு. சசிகாந்த் ஜெயராமன் அவர்கள் தரவரிசையில் இடம் பெற்ற 12 மாணவர்கள் உட்பட இளங்கலை பொறியியல் துறைகள் மற்றும் முதுகலை பொறியியல் துறைகளைச் சார்ந்த 235 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்பித்தார். பின்னர் பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தி சிறப்புரை யாற்றுகையில், ஒருவரின் குணநலனே அவரது அடையாளத்தினை தீர்மானிக்கும் என்பதற்கு நாட்டின் மீது தொலைநோக்குபார்வைகொண்டவராகவும் வெறுப்புணர்ச்சியற்றவராகவும் திகழந்த தலைசிறந்த பொறியாளரும், முன்னாள் ஜனாபதிபதியுமான தெய்வத்திருவாளர் முனைவர் அப்துல்கலாம் அவர்களை மேற்கோள் காட்டி பேசினார். இத்தகைய குணநலத்திற்கு ஒழுக்கமும் நல்ல சிந்தனையுடன் கூடிய மனப்பான்மையும் ஆணிவேராக செயல்படுகிறது என்றார். ஒரு தொழில் நிறுவனம் தொடங்குவதற்கும் பணிபுரிய செல்வதற்கும் நற்குணங்கள் மற்றும் அனுபவங்கள் மூலம்தொடர்ச்சியாக கிடைக்கப்பெறும் கற்றல் ஆகியவை அடிப்படை ஆதாரங்கள் என்று கூறினார். மேலும், அடுத்த தலைமுறைக்கான பாதையினை வகுத்துக் கொடுத்த பெற்றோர்களின் ஆதரவு, தியாகம் மற்றும் கடின உழைப்பினைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி கூறி,தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப். எஸ். திருமூர்த்தி, மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் முன்னிலைவகித்தார்கள். இவ்விழாவினைசிறப்பானஏற்பாடு செய்திருந்த அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள் பாராட்டினார்கள்

# ஊத்துமலையில் கலைஞர் அறக்கட்டளை மூலம் உதவி வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு காசோலை




ஊத்துமலை கழக முன்னோடி நெல்லையப்பன் அவர்கள் மருத்துவ உதவி தொகை வேண்டிதலைவர்கலைஞர்அறக்கட்டளைமூலம் உதவி வேண்டி விண்ணப்பித்திருந்தார்கள் அவருடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் அவருடைய வறுமை மற்றும் மருத்துவ செலவை கணக்கிட்டு ரூபாய் 25000 தலைவர் கலைஞர் அறக்கட்டளை மூலம் அவருக்கு காசோலை வழங்கினார்கள்

ஆனால் நெல்லையப்பன் அவர்கள் மரணம் அடைந்து விட்டார் அவருடைய துணைவியாரும் மரணம் அடைந்து விட்டார் என்கிற விபத்தை விவரத்தை தலைமை கழகத்திற்கு தெரிவித்தோம் அதன் பின்னர் நெல்லையப்பன் அவர்களுடையபுதல்வர்முகேஷ் அவர்களுடைய பெயரில் அவருடைய குடும்பத்திற்கு காசோலை வழங்கப்பட்டது

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட காசோலையைமுகேஷ்அவரின் துணைவியார் வசம் வழங்கினார்கள் நிகழ்வின்போது மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ பத்மநாதன் ஒன்றிய கழகச் செயலாளர் எம் பி எம் அன்பழகன் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் எம் முத்துக்குமார் மாவட்ட ஒட்டுனர் அணி அமைப்பாளர் பிஎஸ் அண்ணாமலை மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சி முருகையா தொழிலதிபர் தங்கதுரை ஒன்றிய துணை சேர்மன் செல்வக்கொடி ராஜாமணி ஒன்றிய கவுன்சிலர் பழனி என்ற பால்துரை ஒன்றிய கவுன்சிலர் முருகேசன் கிளைக் கழகச் செயலாளர் ராமச்சந்திரன் கீழப்பவர் மேற்கொண்டு இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் ஊத்துமலை இளைஞர் அணி ராஜா, குணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# கண்டிப்பேடு அருகே கேட்பாரற்ற நிலையில் கிடந்த பைக்குகள் முறைகேடு? – விசாரணை கோரி சமூக ஆர்வலர்கள் கோரிக்கை






வேலூர் மாவட்டம், திருவலம் அடுத்த கண்டிப்பேடு அருகே ஆய கவுண்டனூர் சாந்தி நகர் பகுதியில் உள்ள பொன்னியம்மன் கோயில் அருகே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு கேட்பாரற்ற நிலையில் ஆறு இருசக்கர வாகனங்கள் கிடந்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் திருவலம் காவல் நிலையத்திற்கு தகவல் அளித்ததைத் தொடர்ந்து, போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று அந்த வாகனங்களை காவல் நிலையத்திற்குகொண்டு சென்றதாக கூறப்படுகிறது.

ஆனால், அந்த வாகனங்கள் தொடர்பாக உரிய பதிவு அல்லது வழக்குப் பதிவு செய்யப்படவில்லை என்றும், பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களில் இரண்டு வாகனங்கள் அருகிலுள்ள மெக்கானிக் கடையில் பழுதுபார்க்கப்பட்டு, பின்னர் அவை விற்பனை செய்யப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக மாவட்ட காவல் உயரதிகாரிகள் முழுமையான விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக்கொணர்ந்து, தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், திருவலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மண் மற்றும் மணல் கடத்தல் உள்ளிட்ட சில சட்டவிரோத செயல்களுக்குகாவல்துறையைச் சேர்ந்த ஒரு 3-ஸ்டார் அதிகாரி மற்றும் சிலர் மாமூல் பெற்றுக்கொண்டு உதவி புரிவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.



ஈரோடு மாவட்டம் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 22 வது ஈரோடு புத்தகத் திருவிழாவில் பள்ளிக்கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பெறப்பட்ட எலைட் உலக சாதனைக்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்துப்பெற்றார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.









ஈரோடு மாநகராட்சி, இடையன்காட்டுவலசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன், கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் (31.07.2026) அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027ஐ முன்னிட்டு வீடுகளில் கணக்கெடுப்பு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) தேன்மொழி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் 22 வது ஈரோடு புத்தகத் திருவிழாவை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ,பத்மபூஷன் எஸ்.கே.எம்.மயிலானந்தன், ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் பள்ளிக் கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் 22 வது ஈரோடு புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி,ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியில் மக்கள் அதிகார கழகம் மற்றும் தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் அதிகார கழகம் இணைந்து நடத்திய மாபெரும் கண்டன ஒன்றிய அரசு தொடர்ந்து இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கு எதிரான சட்டங்களையும், திருத்தச் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதாகவும், இதுபோன்ற நடவடிக்கைகள் தமிழக அரசின் நிலைப்பாட்டையே பொதுச்செயலாளர் எஸ். ஆர். அகமது, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் கண்ணன், AICCTU



ஆர்ப்பாட்டம், வியாழக்கிழமை (ஜூலை 30) மாலை 5 மணியளவில் தூத்துக்குடி திரேஸ்புரம் மேட்டுப்பட்டி பகுதியில் நடைபெற்றது.

இதில் பல்வேறு அரசியல் கட்சிகள், மக்கள் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் அதிகார கழகத்தின் தமிழ்வேந்தன் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து பல்வேறு தோழமைக் கட்சிகளின் பிரதிநிதிகள் கண்டன உரையாற்றினர்.

தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் தூத்துக்குடி சம்சுதீன் சிறப்புரையாற்றுகையில், சட்டங்கள் என்ற பெயரில் ஒருதலைப்பட்சமான சட்டங்களையும் நிறைவேற்றி வருவதாக குற்றம்சாட்டினார்.

மேலும், சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான நீதிமன்ற உத்தரவுகள் தொடர்ந்து வெளியாகி வருவதாகவும், இதுகுறித்து தமிழ்நாடு அரசு தனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இல்லாத நேரத்தில் முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுவதாகவும், நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்களின் கருத்து முழுமையாக கேட்கப்படுவதற்கு முன்பே பல்வேறு கேள்விக்குறியாக்குவதாகவும் அவர் தனது கண்டனத்தை பதிவு செய்தார்.

மேலும், தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் கலவர தடுப்பு மசோதா, PRR (மத வழிபாடு மற்றும் அடையாள உரிமைச் சட்டம்) மற்றும் சேவை அறியும் உரிமைச் சட்டம் ஆகியவற்றை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தோழர் தாளமுத்து செல்வா கருத்துரையாற்றினார். தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஓட்டப்பிடாரம் தொகுதி மாவட்ட செயலாளர் சார்லஸ், எஸ்டிபிஐ மாநில மீனவர் அணி ஒருங்கிணைப்பாளர் கௌதுமைதீன், தாயக மக்கள் கட்சியின் மாநில மாவட்டத் தலைவர் மின்னல் அம்ஜித், மக்கள் நல இயக்கத்தின் நிறுவனர் காந்தி, கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்தின் சுந்தரி மைந்தன், PUCL மாவட்டத் தலைவர் அருட்பணியாளர் எஸ். டி. செல்வராஜ், வழக்கறிஞர் திரவியம், தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் மாவட்ட இளைஞரணி செயலாளர் அப்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இறுதியாக, மக்கள் அதிகார கழகத்தின் மாவட்ட பொருளாளர் சந்துரு நன்றியுரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் தமிழக வீரர்கள் பிரவீன் சித்திரவேல், செல்வபிரபு பதக்கம் வென்று அசத்தல்









கிளாஸ்கோ: காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் மும்முறை தாண்டுதல் பிரிவில் தமிழக வீரர்கள் பிரவீன் சித்திரவேல் மற்றும் செல்வபிரபு ஆகியோர் பதக்கங்களை வென்றுள்ளனர்.

காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் இன்று நடைபெற்ற மும்முறை தாண்டுதல் (Triple Jump) பிரிவு இறுதிப் போட்டியில் தமிழகத்தை சேர்ந்த பிரவீன் சித்திரவேல் வெள்ளிப் பதக்கமும், செல்வ பிரபு திருமாறன் வெண்கலப் பதக்கமும் வென்று, இந்தியாவின் பதக்க எண்ணிக்கையை உயர்த்தினர்.

ஆடவருக்கான மும்முறை தாண்டுதல் இறுதிப் போட்டியில், பிரவீன் 16.58 மீட்டர் தூரம் தாண்டி வெள்ளிப் பதக்கத்தையும், செல்வ பிரபு திருமாறன் 16.52 மீட்டர் தூரம் தாண்டி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். இந்தப் போட்டியில் 16.72 மீட்டர் தூரம் தாண்டிய ஜமைக்காவின் ஜோர்டான் ஸ்காட் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

காமன்வெல்த் போட்டியில் இன்று நடைபெற்ற மகளிர் குத்துச் சண்டை போட்டியில் 57 கிலோ எடைப் பிரிவில் ஜெய்ஸ்மின் லம்போரியாவும், 54 கிலோ பிரிவில் பிரீத்தி பவாரும் தங்கப் பதக்கம் வென்றனர். இதன்மூலம் இந்தியாவின் மொத்தப் பதக்க எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

காமன்வெல்த் போட்டியில் 7 தங்கம், 13 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தம் 27 பதக்கங்களை வென்றுள்ள இந்தியா பதக்கப் பட்டியலில் 6-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

பதக்கப் பட்டியலில் 132 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா முதல் இடத்திலும், 82 பதக்கங்களுடன் இங்கிலாந்து இரண்டாம் இடத்திலும், 54 பதக்கங்களுடன் கனடா மூன்றாம் இடத்திலும் உள்ளது.

# 'No food in Ceuta', 'kicked badly': Why thousands of migrants returned day after entering Spain



*Thousands of migrants who entered Spain's small territory of Ceuta began returning voluntarily to Morocco on Friday, a day after the large-scale crossing sparked chaos and left at least 57 people dead. Spanish authorities said most of the more than 50,000 migrants who had entered by land and sea were already making their way back on their own.*

*To reach Ceuta, some migrants swam for miles, while others encountered authorities who attempted to stop them using water cannons, tear gas and warning shots. Among those who lost their lives were people who drowned, while others died in a stampede.*

*Moroccan security forces used batons and tear gas to push back crowds gathered at the entrances to Ceuta to stop more people from entering the small Spanish territory on Morocco's Mediterranean coast, news agency Reuters reported.*

*On the Spanish side, military vehicles were stationed along parts of the border, while dozens of migrants remained on a hill in Morocco, watching from a distance after being unable to cross.*

*Hundreds of migrants were seen making their way back into Morocco through official border crossings and gaps in the fence.*

*Several said they had been unable to find food or shelter after reaching Ceuta.*

*A young Moroccan man from Tangier told the news agency, "Honestly, I don't even know why I came, and now I'm going back. I haven't eaten since lunch yesterday, even though I brought some money with me ... What we're doing is neither good nor enjoyable."*

*'Kicked badly'*

*Ayman, a 20-year-old hairdresser from the city of Larache, said he reached Ceuta on Wednesday after swimming for five hours.*

*"There was no food inside Ceuta and we were kicked out badly by the (Spanish) army," he said.*

*Out of the 60,000 people who crossed into Ceuta between Thursday and Friday morning, around 45,000 returned to Morocco within hours. Many had spent the night sleeping on the streets of the enclave as residents looked on in shock alongside armed Spanish police officers and soldiers.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.